www.padippakam.com

# கை அசைக்கிறோம் அம்மா!



## கலைமகள் நீலாயுதாட்சி

தோற்றம் : 24. 03. 1935 மறைவு : 03. 06. 2003

படிப்பகம்

www.padippakam.com

# திருமதி. நீலாயுதாட்சிக்கு அஞ்சலி



உறவு : 24. 05. 1935
பிரிவு : 03. 06. 2003

தமிழ் ஈழத்தின்
கலைச் சாதனைப்பெண்
இன்று காவியமாகிவிட்டார்

அன்று
ஒரு பெண்
தமிழ்ப் பெண்
1950 களில் யாழ்ப்பாணத்துத் தமிழ்ப்பெண்
பெண்கள் தங்கள் பட்டலைக்கு வந்து கடிதங்களைப்
பெற்றுக்கொள்ளக்கூடத் தயங்கும் எங்கள் பெண்.
மானிப்பாய் கோவிற்பற்றின் - நவாலியில் பிறந்து,
வளர்ந்து
மானிப்பாய் இந்துக்கல்லூரியில்
கலையும்
விளையாட்டுத்துறையும் சிறக்க
கல்லூரியையும்
தன் கிராமத்தையும் பெருமைப்படுத்திய பெண்
இன்று
புலம்பெயர் மண்ணில்
புயலாக
நடிகமணியாக
நாடகங்கள்
வானொலிகள்
சின்னத்திரைப்படங்கள்
எனப் பெண்களுக்கு முன்னோடியாகத் திகழ்ந்த பெண்
விழுதுமுதல் பலரின் பாராட்டுகளும்
பட்டங்களும் பெற்றபெண்
நீலாயுதாட்சி என நாம் உரிமையுடன் பேசிய பெண்
இன்று நம்மிடையே இல்லை
இதயம்
பலவேளைகளில் வலிக்கும்
பாசம், நேசம், அன்பு, உறவு
இதெல்லாம் இல்லாமல்
ஜடமாக இருக்கமுடியாதா?
இத்தகைய பேரிழப்புகளைப் பார்ப்பதைவிட
இதை
இயற்கை என்பதா
இறைவழி என்பதா
முடிந்தால் சொல்லிவிட்டுப்போ சகோதரி
சென்று வா கலையே
உன் புகழ் வாழும்
அது நிரந்தரம்

*என்றும் அன்புடன்*
*ஏ. இரகுநாதன்*

**தமிழாள் கூத்தவை**
95, Rue des Poissonniers
75018 PARIS

www.padippakam.com

வண்ண வரிகள்

# எங்கள் நீலாட்சி அம்மா நடந்துசென்ற பாதை......

மனிதர்களில் இரண்டு வகை!

பார்க்கும் ஒவ்வொன்றிலும் குறை காண்பவர்கள் ஒருவகை!

பார்க்கும் ஒவ்வொன்றிலும் நிறைவு காண்பவர்கள் இன்னொருவகை!

எதையும் மூளையால் பார்க்க நினைப்பவர்கள் குறை காண்கின்றார்கள்!

அனைத்தையும் இதயத்தால் அளந்துபார்க்க நினைப்பவர்கள் நிறைவு காண்கின்றார்கள்.

மூளையால் வாழ்பவன் விமர்சகன்!

இதயத்தால் வாழ்பவன் கலைஞன்.

எங்கள் நீலதயாட்சி அம்மா அவர்கள் வாழ்ந்த காலங்களில் இதயத்தால் வாழ்ந்தவர்.

தனது தலைமுறைக் கலைஞர்கள் என்றில்லை இளைஞர்கள், புதியவர்களின் கலைப்படைப்புக்களில் பணியாற்றிய போதும் அவர்களோடு ஒருவராகத் தன்னை மாற்றிக்கொண்டு கலைப்பணி ஆற்றுவதும். சிறந்தவைகளை பாராட்டி வைப்பதிலும் நீலாட்சிஅம்மா என்றும் உயர்ந்த இடத்திலேயே இருந்தார்.

நீலாட்சி அம்மாவை பிறந்த மண்ணில் கலைத்துறைக்கு அழைத்தது அவரது பாடசாலை வாழ்வு. புலம்பெயர்ந்த பின்னர் மீண்டும் கலைத்துறைக்குள் நுளைய வைத்தவர் மறைந்த கலைஞர் நடிப்பிசைக்காவலர் அமரர் கிறெகரி தங்கராசா அவர்கள்!.

ஈழத்தில் மேடைகளில் ஜொலித்து புலம்பெயர்ந்து வந்தபின்னர் மறைந்திருந்த பல கலைஞர்களை பாரிசில் மீண்டும் அரங்கங்களில் உலவவிட்டு அழகுபார்த்தவர் அமரர் கிறெகரி என்றால் அதில் மிகையில்லை.

நீலாட்சி அம்மா தனது பாடசாலைக்காலங்களில் சிறந்த கலைஞராகவும் சிறந்த விளையாட்டு வீராங்கனையாகவும் திகழ்ந்தவர். பாடசாலையில் போட்டி நாடகங்களில் பங்குபற்றி பல பரிசில்களைப் பெற்றிருக்கின்றார். அன்று இவரே எழுதி இயக்கிய "நீலாவின் திருமணம்" என்னும் என்னும் நாடகம் முதற்பரிசு பெற்றது இங்கு குறிப்பிடத்தக்கது.

பாரிஸில் கலைவிழா ஒன்றிற்கு நாடகம் பார்க்கச் சென்ற இவர்கள் அங்கு மேடையில் பாடி நடித்துக்கொண்டிருந்த கிறேகரி அவர்களை நேரில் சந்தித்து பாராட்டியடியதோடு அவரிடம் ஒரு விண்ணப்பத்தையும் வைத்தார்! அது இதுதான் "நானும் ஓரளவு நடிப்பனடா தம்பி இனிமேல் நீர் போடுற நாடகங்களிலை எனக்கும் ஒரு சந்தர்ப்பம், தாரும்" என்பதுதான்.

இந்தச் செய்தி கிறேகரியின் வாயில் சக்கரைப்பொங்கலை ஊட்டிவிட்டதைப்போல இருந்தது. அடுத்து கிறெகரி அவர்கள் அரங்கேற்றிய "பாதுகை" நாடகத்தில் கூனி என்னும் பாத்திரத்தில் நடிக்கவைத்து இவரின் கலைப்பணிக்கு களம் அமைத்துக் கொடுக்கின்றார். அதன் மூலம் இவரின் கலைப்பயணம் புலம்பெயர்ந்த மண்ணிலும் நீண்ட பயணமாக தொடர்கின்றது. தொடர்ந்து பிரான்ஸ் தமிழ்க் கலைஞர் ஒன்றியத்துடன் இணைந்து ஐரோப்பா முழுவதும் பல மேடைகளில் ஒளி,வீசியிருக்கின்றார் இந்த நடிப்புச்சுடர்.

"உணர்வுகள்" "பொன்னாடை" "இவர்கள் இப்படித்தான்" "சீட்டு" "தேடிவந்த தேசம்" "கிடுகுவேலிக் கீதங்கள்" போன்ற நாடகங்கள் இவரின் நடிப்புத்திறனுக்கு சவால் விட்ட நாடகங்களாகும். பிரான்ஸ் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவினர் அரங்கேற்றிய "ஔவையார்" நாடகத்தில் அன்னை பூபதியாக வேடமேற்று பல்லாயிரக்கணக்கான ரசிகர்களின் பாராட்டுதலைப்பெற்றவர். எங்கள் நீலாட்சி அம்மா.

அளவெட்டி மகாஜனக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் பிரான்ஸ் கிளையினர் மேடையேற்றிய மாவை நித்தியானந்தனின் "அம்மா" நாடகத்தில் சாம்சன், லீனா-ஜெயக்குமார் ஆகிய இருவரும் தங்களது உணர்ச்சிகரமான நடிப்பால் மேடையை ஆக்கிரமித்துக்கொண்டிருக்க ஒரு கட்டிலில் படுத்திருந்தபடியே அவர்களுக்கு ஈடுகொடுத்து நடித்து அந்த அரங்கத்தில் இருந்தவர்களையெல்லாம் வியக்கவைத்தவர்! இவர்.

பாரிஸ் வீடியோ மலர் ஊடாக பல வீடியோ நாடகங்களிலும் தனது திறமையை வெளிச்சம் போட்டுக் காட்டியிருக்கின்றார். "மாற்றம் தேடும் மனங்கள்" "யார் இவர்கள்" "வினாக்கோலம்" "ஆத்மாவின் ராகங்கள்" "ஒருபிடி மண்" "மலர்கள் இல்லாத மாலை" "நீந்தத்தெரியாத மீன்கள்" போன்றவற்றுடன் யேர்மனியில் உள்ள கலைக்கண் வீடியோ ஸ்தாபனத்தினர் "உணர்வுகள்" நாடகத்தை வீடியோ நாடகமாக எடுத்தபோது அதிலும் நடித்திருக்கின்றார்.

பாரிஸில் எடுக்கப்பட்ட சின்னத்திரைப்படங்களான "ராஜாவின் ராகங்கள்" "சத்தியகீதை" "நீ ஒரு தெய்வம்" "விடுதலைப் பாதையிலே" போன்றவற்றிலும் நடித்து ஈழத்த மனோரமா என பெயர் எடுத்தவர் எங்கள் மீனாட்சி அம்மா.

94ம் ஆண்டு பிரான்ஸ் தமிழ்க்கலைஞர் ஒன்றியம் இவரின் கலைத்திறமையைப்பாராட்டி பொன்னாடை போர்த்தி தங்க மாலை அணிவித்து கௌரவித்தது.

விழுது கலை ஊக்குவிப்பு மன்றத்தினர் தமிழ்நாட்டின் திரைப்பட முன்னணி நடிகைகளான ரேவதி, சுகாசினி, ஆகியோர் முன்னிலையில் "கலைஞானி" என்னும் பட்டத்தை வழங்கியிருக்கி கௌரவித்திருக்கின்றார்கள்

இப்படியான கௌரவங்களையெல்லாம் பெற்றுக்கொண்டு இவர் சோர்வின்றி வெற்றி நடைபோடுவதற்கு மூல காரணமே இவரிடம் இயற்கையாகவே உள்ள திறமைகள்தான். இவரிடம் உள்ள சிறப்புகளில் ஒன்று ஒத்திகைக்காக இவர் அதிக நேரத்தை வீணடிப்பதில்லை! நாடகப்பிரதியை ஒருமுறை பார்த்துவிட்டால் பின்னர் பாத்திரத்தை உணர்ந்து நடிப்பதில் இவருக்கு நிகர் இவர்தான்.

இப்படியாக புகழின் சிகரத்தை நோக்கி நடந்து கொண்டிருந்தபோதுதான் இவரின் வாழ்வில் ஒரு இடி விழுந்தது! அது இவர் பெற்ற ஆசை மகள் வாழவேண்டிய வயதில் வாழ்க்கையை முடித்துக்கொண்டு இறைவனடி சேர்ந்ததுதான்!. அந்த அதிர்ச்சி நீலாச்சி அம்மாவின் வாழ்க்கையின் அத்திவாரத்தையே ஆட்டிவைத்தது.

அந்த இடி விழுந்த நாளில் இருந்து இவர் பிரமை பிடித்தவர் போலானார். சொநதங்களை மட்டுமல்ல தான் விரும்பி தெரிவுசெய்த தன் உயிரிலும் மேலான கலைத்துறையை விட்டும் ஒதுங்கியே இருந்தார்.

வாழ்ந்த காலங்களில் பல்லாயிரக்கணக்கான மக்களை தனது நடிப்பால் மகிழ்வித்துவந்த எங்கள் நீலதயாட்சி அம்மா அவர்களின் மரணம் அவர்களின் இரத்த உறவுகளை மட்டுமல்ல இவரின் கலைப்பயணத்தில் இவரோடு இணைந்து சென்ற கலைஞர்களையும் இவரின் பல்லாயிரக்கணக்கான ரசிகர்களையும் கவலையுற வைத்திருக்கின்றது.

அம்மா!
நீங்கள் மறைந்தது இந்த மண்ணை விட்டுத்தான்
எங்கள் மனங்களை விட்டல்ல.

*வண்ணை தெய்வம்*
நந்தினி கலைத் தென்றல்

கலைத்தாய்
நீலாட்சியம்மாவிற்கு
கண்ணீர் அஞ்சலி!

வாழ்க்கையில் நல்ல அன்னையாய்
கலைஞர்களுக்கு நல்ல நண்பராய்
புகழ்க்கொடி நாட்டி வந்த-அமரர்
நீலதயாட்சிக்கு -எனது
கண்ணீர் அஞ்சலிகள்!

*சி—தாராளபிள்ளை*
பாரிஸ் கல்விநிலைய காப்பாளர்

கசியாத கண்களையும்
கசியவைத்த
மரணமிது!.....

கசியாத கண்களையும் தம்
நடிப்பால் கசியவைப்பார்
வாழ்வில் -தம்
கனிவான பேச்சால்
அனைவரையும்அணைத்திடுவார்
இனியொரு நீலாட்சியம்மா
எமக்கெப்போ கிடைத்திடுவார்
விதி செய்த சதியினாலே ஒரு
கலைத்தாயை இழந்துவிட்டோம்.

*அ—இராகுலன் குடும்பத்தினர்*

www.padippakam.com



ஒரு தாயாய்
நடிகையாய்
நற் பண்பாளராய்
எம்மோடு வாழ்ந்து
எம்மை விட்டு மறைந்துவிட்ட
நீலாட்சி அம்மாவிற்கு
எங்கள்
இதய அஞ்சலியைச்
சமர்ப்பிக்கின்றோம்.



மகாஜனா பழையமாணவர் சங்கம்
- பிரான்ஸ் -

கொடியவன் காலன் உம்மை
கொன்றது கொடிது அம்மா!

தடியினை ஊன்றவில்லை உம்
தளிர் முகம் வாடவில்லை
கொடியவன் காலன் உம்மை
கொன்றதும் கொடிது அம்மா!

ஈழநிலா-தில்லைச்சிவம்

*ஈழநிலா*
இசைக்குழுவினர்
பாரிஸ்

நீலாட்சி அக்காவிற்கு -என்
கண்ணீர் அஞ்சலி!............

கலைத்துறையில் கால் பதித்து
பல நூறு மேடை கண்டீர்
இலையினில் சோத்தை வைத்து
சுவையுடன் உண்ணல் போன்று
பல..பல..வேடம் கண்டு
பார்ப்பவர் மனம் கவர்ந்தீர் இன்று
எமக்கெல்லாம் விடைகொடுத்து
பரமனடி சென்றீரோ?

*பெஞ்சமின் – இமானுவல்*
தலைவர்-திருமறைக்கலாமன்றம்
பிரான்ஸ்



படிப்பகம்

www.padippakam.com



*தமிழ் கலையையும்*
*கலைஞர்களையும்*
*தம்பால் நேசித்து தனித்துவம்*
*மிக்க*
*கலைத்தாயாக பாரிசில்*
*தொடங்கி*
*ஐரோப்பிய நாடுகளில் கலைப்*
*பயணம் நடத்தி*
*பல்லாயிரக்கணக்கான*
*தமிழ் உணர்வாளர்கள் மனதில்*
*இடம்பிடித்த ஈழத்து*
*மனோரம்மா*
*என்று அன்பாக*
*அழைக்கப்பட்ட*
*ஒப்பற்ற நடிகை திருமதி*
*நீலாட்சிஅம்மாவின்*
*இழப்பு என்னை மட்டுமல்ல*
*அவரோடு*
*இணைந்து கலைப்பணி புரிந்த*
*அனைவரையும்*
*ஆறாத் துயரத்தில்*
*ஆழ்த்திவிட்டது.*
*இவரது பிரிவால் துயருறும்*
*பிள்ளைகள்*
*மருமக்கள் பேரப்பிள்ளைகள்*
*மற்றும் உறவினர்க்கும்*
*ஆறுதல் கூறி நிற்கின்றேன்.*

*ரி. தயாநிதி*

**கலைத்தாய்க்கு எங்கள்**

# கண்ணீர் அஞ்சலி

மானிப்பாய்
இந்துக்கல்லூரியின் பழைய
மாணவி கலைஆச்சி நீலாட்சி
அக்கா மறைந்து விட்டார்
என்ற செய்திகேட்டு திகைத்து
நின்றேன்.
அவர் பயின்ற கல்லூரியின்
பழையமாணவன் நான்
என்பதில் பெருமை. கல்லூரி
இல்ல நாடகப்போட்டிகள்,
பேச்சுப்போட்டிகள்,
விவாதமேடைகளென அவர்
கால்பதிக்காத துறையே
கிடையாது.
தன்னடக்கம், கலைப்பணிவு,
கலைத்துணிவு, திறன்
அவையடக்கம் இத்தனைக்கும்
சொந்தக்காரி இன்று
நம்மிடையே இல்லை என்று
நினைத்துப்பார்க்க
முடியவில்லை. புலம்பெயர்
நாட்டிலும் இளைய
தலைமுறைகளுடன்
கலைத்துறையில் கொடிகட்டிப்
பறந்த நீலாட்சி அக்காவுக்கு
என் குடும்பத்தின் சார்பில்
கண்ணீர் அஞ்சலி செலுத்தி
கலைத்தாய்க்கு
வணக்கத்துடன்
பிரியாவிடை கொடுக்கின்றேன்.

சகோதரன்
அப்புக்குட்டி ரி. இராஜகோபால்



படிப்பகம்

www.padippakam.com

*நீலாட்சி அம்மாவிற்கு*
எங்கள் இதயம் கனிந்த
# கண்ணீர் அஞ்சலி

இமயம் சாய்ந்தாலும்
தாங்கும் அம்மா
என் இதயம்
கலை இமயமே
நீ சாய்ந்து போனால்
தாங்குமா இந்த
கலை உலகம்

அன்னை பூபதியை -நான்
கண்ணால் கண்டதில்லை
அவள் முகத்தை உன் முகத்தில்
சத்தியமாய்க் கண்டேனம்மா

மேடையில் அம்மாவாக
திரையிலே வீரத்தாயாக
நீ ஒரு தெய்வமாக
நீங்காத இடம் பிடித்து
அமரர்களாகிய கலைஞர்களுடன்
நீயும் சங்கமித்துக் கொண்டாயா?

மண்ணிலே செய்தது போதும்
விண்ணிற்கு வா என்றழைத்தாரா
முன்னே போன மும்மூர்த்திகள்?
தாயே நீ உன் இமை மூடினாலும்
வாழ் நாள் முழுவதும்
வாழ்ந்துகொண்டே இருக்கின்றாய்.
உன் ஆத்மா சாந்தி அடைய
நித்தம் என் ஆண்டவனை
வேண்டுகின்றேன்.

ஓம் சாந்தி.....சாந்தி....சாந்தி

ஞானம்-பீரிஸ்
**G.P. பிலிம்ஸ்**
**பிரான்ஸ்**

# கலை உறவுகளின் கண்ணீர் அஞ்சலி

நந்வனக் குயில்கள் போன்று
நற்கலை படைத்து நின்று
சந்தணத்தின் மணத்தைப் போன்று
சாதனைகள் படைக்கவென
வந்துதித்து எம்முடனே -நற்
கலைஞராய் துலங்கி நின்றார்
இன்று எம்
சிந்தையெல்லாம் கிறங்கவைத்து
வந்த இடம் சென்றாரோ?

கலைத்துறையில் கால் பதித்து
பலநூறு மேடை கண்டு
கலை நிலவாய் வாழ்ந்தவரை
கரு மேகம் மறைத்ததுவோ?
காலன் அவன் அழைத்தனனோ?

காலையும் மாலையும்
இணைவதில்லை
காலமோ சென்றபின்
வருவதில்லை
சோலையும் பாலையும்
ஒன்றாகிடுமோ?
சோகமே வாழ்க்கையின்
இருளாகுமாம்!

எங்கள் நீலதயாட்சியம்மா
இருளில் மறைந்துவிட்டார்!
காற்றில் கலந்துவிட்டார்!
கடலில் கரைந்துவிட்டார்!

அம்மா!
காற்றும், கடலும்
வானும், நிலவும்
வாழ்கின்ற காலம்வரை
உங்களது நினைவுகளும்
வாழ்ந்துகொண்டே இருக்கும்

உங்கள்
**கலை உறவுகள்**
**பாரிஸ்**



படிப்பகம்

# 'கலைஞானி'க்கு 'கலை மாமணி'யின்
# கண்ணீர். அஞ்சலி

நான் எனது குடும்பத்தைவிட கூடுதலாக நேசிப்பது எனது கலை உறவுகளைத்தான்.

இதற்குக் காரணம்

நான் எனது குடும்ப உறவுகளைவிட கூடுதலான காலங்களை கலைஞர்களுடனேயே கழித்துவிட்தனால்த்தான்!

புலம்பெயர்ந்து பாரிஸ் வந்த பின்னர் எனது கலைப்பயணத்தில் இணைந்துகொண்டடு எனது இதயத்தில் இடம் பிடித்தவர்களில் சகோதரி நீலதயாட்சியும் ஒருவர்

ஆலம்ரம் போல செழித்திருந்த எங்கள் கலைக்குடும்பத்தின் வேர் ஒன்று இன்று விறகாகிப்போனதுவோ?

தாயே கண்ணீருடன் கை அசைக்கின்றேன்

'கலைமாமணி'

*முகத்தான் எஸ். யேசுறட்ணம்*

# கலைத்தாய்க்கு எங்கள்
# கண்ணீர் அஞ்சலி

கலைஞர்களுக்கெல்லாம் தாயாக வாழ்ந்தவர் திருமதி நீலதயாட்சி அம்மா அவர்கள்.

இன்று இறையடி சேர்ந்த இந்த கலைத்தாய்க்கு
அஞ்சலி செலுத்தும் பிள்ளைகளுடன்
நாமும் இணைந்துகொள்கின்றோம்.

*கொப்பி லா,சப்பல்*
Copie La Chapelle

'கலைஞானி திருமதி-நீலதயாட்சி அம்மா அவர்களின் புகழுடலை வழியனுப்பி விடை கொடுக்கும் இந்த நேரத்தில் கலை உறவுகளின் ஆதரவுடன் 'வண்ணை' சஞ்சிகை இவ் அஞ்சலி அனுபந்தத்தை வெளியிடுகின்றது.

www.padippakam.com

# அஞ்சலி! அஞ்சலி!! அஞ்சலி!!!

## வித்துவான் க.ந.வேலன்

ஈழத்தமிழர்களின் இலக்கியச் செல்வங்களில் ஒன்றான ஐயா வித்துவான் க.ந.வேலன் அவர்களின் மறைவு எம்மை அதிர்ச்சியடைய வைத்துள்ளது. எமது வானொலியின் நிகழ்ச்சிகளை அவ்வப்போது பாராட்டி எம்மை ஊக்கப்படுத்தியிருக்கின்றார். எமது நிகழ்ச்சிகளில் ஒன்றான் "ஏடும் எழுத்தாணியும்" நிகழ்ச்சியில் தொடர்ந்து மூன்று வாரங்கள் தொலைபேசியினூடாக தொடர்புகொண்டு தமிழின் சிறப்புக்களையும், தமது அனுபவங்களையும் எமது நேயர்களோடு பகிர்ந்திருக்கின்றார். அந்த இனிய தமிழ் நெஞ்சம் இறைவனடி சேர்ந்துவிட்டது. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

## திருமதி அமுது - திரேசம்மா

எங்களின் அன்பிற்கும், மதிற்பிற்கும் உரிய கவிஞர் புலவர்மணி அமுது ஐயா அவர்களின் துணைவியார் திருமதி திரேசம்மா அவர்களின் மறைவு எங்களது மனங்களைக் கலங்க வைத்திருக்கின்றது.
அன்னாரின் சாந்திக்காக கர்த்தரைப் பிரார்த்திக்கின்றோம்.

## திருமதி நீலாட்சி சிவசுப்பிரமணியம்

எங்கள் மண்ணின் கலை வாசங்களை எமது கலைஞர்களுடன் இணைந்து ஐரோப்பா எங்கும் பரப்பிவந்த திருமதி நீலாட்சி அக்கா அவர்களின் மரணம் புலம் பெயர்ந்து வாழ்கின்ற கலைஞர்களையும், ரசிகர்களையும் மிகவும் வேதனை அடைய வைத்திருக்கின்றது.
திருமதி நீலதயாட்சி அம்மா அம்மா அவர்களின் மறைவு அவரின் குடும்பத்தினருக்கு எப்படி ஈடு செய்யமுடியாததோ அதேபோன்று எங்கள் கலைத்துறையினருக்கு ஈடு செய்யமுடியா இழப்பே

அன்னாரின் சாந்திக்காகவும் இறைறைவனிடம் வேண்டுகின்றோம்.

**A.B.C தமிழ்ஒலி கலையகம்.**

FRANCE. Tel:- 00 33 1 48 30 44 55



படிப்பகம்



நீண்ட தூரப்பயணம் - அது
நிரந்தரப்பயணம் - எங்கள்
நீலாட்சி அம்மா மீளாப்பயணம்


பார்புகழும் நகர்களிலே
பாரிசு மாநகரும் என்று - எங்கள்
பழக்கமும் நெருக்கமாகி - நல்
பாசம் கொண்டதுவும் இங்கு.

கலை ஊடகங்கள் பாரிசில்
களம் அமைக்க - உயர்
காரணமானவர்கள் பலர் - அதில்
கலைத்தாய் நீலாட்சிஅம்மாவும்
காலம் மறக்காத காவியமாகிறார்.

என்னோடும் என் துணைவியோடும்
எத்தனை நாடகங்கள்
எத்தனை படங்கள்
இணைந்தோம் நடித்தோம்
இல்லை இனிய வாழ்வு கண்டோம்

இன்றில்லை என்று - அன்னை
என்றுமே இல்லாமல் போயிடுவாரோ
இல்லை... இல்லை...
கலையுலகம் உள்ளவரை - நம்
கண்ணுக்குள் என்றும் வாழ்வார்.
அன்னையின் ஆத்ம சாந்திக்கும்
துயருள் மூழ்கும் அவர் குடும்பத்தோர்க்கும்
இறையருள் வேண்டுகிறோம்.

*பிரியாலயம்* துரைஸ்
குடும்பம்
*பிரியாலயம்* கலையகம்


தாமரை குளத்தில் மின்னும்
தாழையோ தரையில் மின்னும்
மேடையில் ஜொலித்த பெண்கள்
மிகமிக குறைவே! அவரில்
தாயினைப்போல் எங்கள்
அருகிருந்து அரவணைத்த
நீலாட்சியக்கா
நீண்ட துயில் கொள்கின்றார்.